**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண்**
**அறிக்கை**
**(17.12.2022 முதல் 21.12.2022 )**

**அறிக்கைஎண் 100/2022** **தேதி.16.12.2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 24°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 18°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 06°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 13.12.22 முதல் 15.12.22 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 42 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 2-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (13.12.2022 முதல் 15.12.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 21.12..2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13/12 | 14/12 | 15/12 | தேதி | நாள்-1 17/12 | நாள்-2 18/12 | நாள்-3 19/12 | நாள்-4 20/12 | நாள்-5 21/12 |
| 5.4 | 1.8 | 0.5 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 4 |
| 28 | 30 | 28 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 30 | 31 | 30 | 31 | 30 |
| 21 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 19 | 20 | 20 | 21 | 19 |
| 7 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 6 | 7 | 6 | 7 | 8 |
| 90 | 95 | 91 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 90 | 90 | 90 | 90 |
| 70 | 68 | 42 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 50 | 50 | 50 | 60 |
| 9 | 2 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 8 | 6 | 6 | 6 |
| 70 | 50 | 50 | காற்றுவீசும் திசை | 90 | 70 | 110 | 90 | 90 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (17.12.2022 முதல் 21.12.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். 21.12.22 ஆகிய தேதியில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின்

ஈரப்பதம் **90** சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் **40** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு **6-8** கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மெடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 17-12-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 18-12-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 19-12-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 20-12-2022 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 21-12-2022 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 0.0 | 1.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்கள் மழையற்ற வறண்ட (அ) லேசான தூறல் மழையுடன் காற்றின் வேகம் **6 - 8** கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது.<br>மண் ஈரத்தினைப்பொறுத்து நீர் பாசனம் செய்யவேண்டும்.<br>வறண்ட வானிலையினைப்பயன்படுத்தி உரமிடுதல் மருந்து தெளித்தல் மற்றும் களையெடுத்தல் போன்ற வேலைகளை முடித்துக்கொள்ளவும். |
| நெல் | வளர் மற்றும் பூக்கும் பருவம் | நெல்லில் குலைநோய் வருவதற்கான சாதகமான காலநிலை இருப்பதால் விவசாயிகள் வயலை நன்கு கவனித்து தாக்குதல் தென்பட்டால் முதலாவதாக ஒரு லிட்டர் தண்ணீருக்கு **1** கிராம் டிரைசைக்ளோசோல் என்ற அளவிலும் இரண்டாவது முறையாக ஒரு லிட்டர் தண்ணீருக்கு **1** கிராம் கார்பன்டசிம் என்ற அளவில் தெளிக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் குளிர்ந்த மற்றும் வறண்ட வானிலையைப் பயன்படுத்தி நாவரை பருவகாலத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்வதை ஆரம்பிக்கவும்.<br>அதிகமான ஈரப்பதத்துடன் கூடிய குறைந்த வெப்பநிலை காணப்படுவதால் நெற்பயிர்களில் பாக்டீரியல் இலைக்கருகல் நோயினைக்கட்டுப்படுத்த எக்டருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்ளின் **300** கிராம் + காப்பர் ஆக்சிகுளோரைட் **1250** கிராம் கலந்து தெளிக்கவும்.<br>தற்போதைய வறண்ட வானிலை காரணமாக கதிர் பருக்கும் பருவத்திலுள்ள சம்பா நெல்லுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.<br>வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முன் பருவ சம்பா பயிரினை அறுவடை செய்து இயந்திரம் மூலம் உலர்த்தவும். |
| கொண்டைக்கடலை | வளர் மற்றும் பூக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் கொண்டைக்கடலையில் வாடல் நோய் வரவாய்ப்புள்ளது. நோய் தாக்கியிருக்கும் இடங்களில் ஒரு சத கார்பன்டெசிம் கரைசலை தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| பருத்தி | | வறண்ட வானிலையினைப்பயன்படுத்தி வெடித்துள்ள பருத்தியை உடனடியாக பறித்து நிழலில் உலர்த்தி சேகரிக்கவும். |

| | | |
|---|---|---|
| வாழை | | இறவை தோட்டக்கால் பகுதியில் வாழையை நடுவு செய்தபின் நீர்பாசணம் செய்யவும். |
| மஞ்சள் | | இலேசான தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் கிழங்கு பிடிக்கும் பருவத்தில் உள்ள மஞ்சளில் போதிய மண் ஈரம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். |
| மரவள்ளி | | இலேசான தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் கிழங்கு உருவாகும் உள்ள மரவள்ளிக்கு குறிப்பிட்ட இடைவெளியில் நீர்பாசனம் கொடுப்பது கிழங்கு உருவாவதை எளிதாக்கும். |
| தென்னை | | தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்கு சரியான காலம். எனவே மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம், சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ மற்றும் மூயூரேட் பொட்டாஸ் 1 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2 கிலோ, நுண்ணூட்டக்கலவை 500 கிராம் மற்றும் மக்கிய தொழு உரம் 50 கிலோ இடவேண்டும்.<br>காய்க்கும் தென்னை மரங்களுக்கு த.வே.ப.க தென்னை டானிக்கை 200 மிலியினை வேர் மூலமாக ஆறு மாத இடைவெளியில் கொடுக்கவும். |
| கால்நடைகள் | | குளிர்ந்த மற்றும் அதிக ஈரப்பதமான வானிலை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளுக்கு போதிய அளவு சுத்தமான குடிநீர் கொடுக்கவும். |

**குறுஞ்செய்தி**

- நெல்லில் குலைநோய் வருவதற்கான சாதகமான காலநிலை இருப்பதால் 1 லி. நீருக்கு 1கி. டிரைசைக்ளோசோல் 2வது முறையாக ஒரு லி. நீருக்கு 1கி. கார்பன்டசிம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**